டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.08.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 046 - Madurai | Online Edition

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

# தக்காளிக்கான விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், ஆக.10

இந்தியாவின் மிக முக்கியமான காய்கறிப் பயிர்களில் தக்காளியும் ஒன்றாகும். இது நாட்டின் மொத்த காய்கறி உற்பத்தியில் சுமார் 9.5 சதவீத பங்களிப்பை அளிக்கிறது. உலக அளவில் தக்காளி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதுடன், உலக உற்பத்தியில் சுமார் 11 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் முதல் முன்மதிப்பீடுகளின்படி (2025-2026), நாட்டில் சுமார் 8.75 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டு, சுமார் 227 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத், ஒடிசா, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகியவை இதன் முக்கிய உற்பத்தி மாநிலங்களாகும். தமிழ்நாடு சுமார் 0.44 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளியைப் பயிரிட்டு, சுமார் 14 லட்சம் டன்களை உற்பத்தி செய்வதன் மூலம் நாட்டின் மொத்த தக்காளி சாகுபடி பரப்பளவில் சுமார் 5 சதவீத பங்களிப்பை அளிக்கிறது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகியவை தமிழ்நாட்டில் தக்காளி அதிகம் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களாகும். உள்ளூர் சாகுபடி தக்காளி கிடைப்பதில் கணிசமான பங்களிப்பை அளித்தாலும், அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவிலிருந்து வரும் வரத்துகளும் தமிழ்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

தற்போது, கோயம்புத்தூர் மொத்த விற்பனை சந்தையானது அருகிலுள்ள கிராமங்கள் மற்றும் கர்நாடகாவிலிருந்து வரும் வழக்கமான வரத்துகள் மூலம் தக்காளியைப் பெறுகிறது. அதே வேளையில், உபரி வரத்துகள் ஒட்டன்சத்திரம் சந்தை வழியாக கேரளாவுக்கு அனுப்பப்படுகின்றன. இது அதிகப்படியான வரத்தை நிர்வகிக்கவும், சந்தையில் தக்காளி கிடைப்பதை சீராக வைத்திருக்கவும்உதவுகிறது.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பிரிவின் கீழ் செயல்படும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளில் கடந்த 15 ஆண்டுகளில் நிலவிய தக்காளி விலைகளை ஆய்வு செய்துள்ளது.

இந்த ஆய்வின் முடிவுகளின் படி, அறுவடை காலத்தில் நல்ல தரமான தக்காளியின் பண்ணை விலை கிலோவுக்கு சுமார் ரூ.33 முதல் 35 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வர்த்தகத் தகவல் களின்படி, பருவமழை மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வரும் வரத்து ஆகியவற்றைப் பொறுத்து விலையில் மாற்றம் ஏற்படலாம். எனவே, விவசாயிகள் இதற்கேற்ப தங்கள் விதைப்பு முடிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங் களுக்குத் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையம் மற்றும் தொழில்நுட்ப விவரங்களுக்குத் பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறிப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் தொடர்பு கொள்ளலாம்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், ஆக.10

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக மக்காச்சோளத்தில் படைப் புழு மேலாண்மை பற்றிய வெளி வளாக பயிற்சி 10.08.26 அன்று மங்களூர் வட்டாரம், சிறுபாக்கம் கிராமத்தில் நடைப்பெற்றது. இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர்தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கு மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

மக்காச்சோள பயிருக்கு ஒவ்வொரு 10 வரிசைக்கும் 75 செ.மீ இடைவெளி விட வேண்டும். இதனால் பூச்சிகொல்லி தெளிப் பதற்கு ஏதுவாக அமையும், மேலும் வரப்பு பயிராக கம்பு, நேப்பியர் பயிர் செய்யவும், ஊடுப்பயிராக உளுந்து மற்றும் பச்சைபயிறு செய்யுமாறும் மற்றும் படைப்புழுக்களை கவர்ந்து இழுக்கும் இனகவர்ச்சிபொறி வைக்குமாறும் வலியுறுத்தினார். மேலும் முனைவர் கோ.சத்திய நாரயணன், உழவியல் தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு மற்றும் ஒருங் கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றியும் விவசாயி களுக்கு விளக்கமாகவும், செயல் முறையாகவும் காண்பிக்கப் பட்டது. தனுக்கா உர நிறுவனமும் இணைந்து இப்பயிற்சியை ஒருங்கிணைந்து நடத்தினர். இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், மங்களூர் வட்டாரம், சிறுபாக்கம் கிராமத்தில் உள்ள விவசாயிகள் 70-க்கும் மேற் பட்டோர் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்–ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**12. பட்டாணி சூப்**

**தேவையான பொருட்கள்**

பச்சை பட்டாணி — 1 கப்

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

மிளகு தூள் சிறிதளவு

உப்பு தேவையான அளவு

**செய்முறை**

பட்டாணியை வேக வைத்து அரைத்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# நாவக்குறிச்சி கிராமத்தில் அங்கக வேளாண்மை பயிற்சி



சேலம், ஆக.10

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்திற்கு உட்பட்ட நாவக் குறிச்சி கிராமத்தில் அட்மா (ATMA) திட்டத்தின் கீழ் அங்கக வேளாண்மை’ (இயற்கை விவசாயம்) குறித்த சிறப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி வரவேற்புரையாற்றிய இம்முகாமிற்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமை தாங்கி, இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம், மண் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் நஞ்சற்ற உணவு உற்பத்தியின் அவசியம் குறித்து விளக்கிப் பேசினார். தொடர்ந்து உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் திவ்யபாலா வேளாண் துறையின் அரசு நலத்திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினர். சிறப்புப் பயிற்சியாளர் பிரவீன் பங்கேற்று, அங்கக வேளாண்மைச் சான்றிதழ் பெறும் முறைகள் மற்றும் பஞ்சகாவியா, தசகாவியா, ஜீவாமிர்தம், மீன் அமிலம், தேமோர் கரைசல், ஐந்திலை கரைசல் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார்.

மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் பயிர் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் ‘3G கரைசல்’ தயாரிக்கும் முறையை நேரடியாகச் செயல்விளக்கம் செய்து காண்பித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ் அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கிய இப்பயிற்சியில், தலைவாசல் வட்டாரத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# Food Pro Expo 2026-ல் உணவுத்துறை புதுமைகளை வெளிப்படுத்திய COXBIT

கோயம்புத்தூர், ஆக.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையமான COXBIT, சென்னை வர்த்தக மையத்தில் ஆகஸ்ட் 7 முதல் 9, 2026 வரை நடைபெற்ற Food Pro Expo 2026 கண்காட்சியில் பங்கேற்று, ஸ்டார்ட் அப் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட புதுமையான உணவுப் பொருட்களை காட்சிப்படுத்தியது.




கண்காட்சியின் போது, தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் பி.வெங்கடரமணன், கண்காட்சி தளங்களைப் பார்வையிட்டு, COXBIT குழுவினருடன் கலந்துரையாடினார். உணவுத்துறையில் புதுமைகளை ஊக்கு வித்தல் மற்றும் ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் புதுமையான யோசனைகளை சந்தைக்குத் தயாரான பொருட்களாக மாற்றுவதில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல் தொடர்பான COXBIT-ன் முன்னெடுப்புகள் குறித்து குழுவினர் அமைச்சரிடம் விளக்கினர். நிதியுதவி மற்றும் நிதி வாய்ப்புகளைப் பெறுவதற்கான வழிகாட்டுதல், பொருட்களின் மேம்பாடு மற்றும் தரச் சரிபார்ப்பிற்கான நவீன ஆய்வக வசதிகளுக்கான அணுகல், தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை, மேலும் பொருட்களின் மேம்பாட்டிற்கான பிரத்யேக பணியிடங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த ஸ்டார்ட் அப் ஆதரவு சூழலமைப்பை COXBIT எடுத்துரைத்தது. COXBIT உணவுத்துறை சார்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்ட M/s. Aviva Organics, M/s. Themolife Pharmaceuticals, M/s. Ziwwits Sustainable Technologies Private Limited மற்றும் M/s. Arshitha Food Products ஆகிய நிறுவனங்களின் புதுமையான உணவுப்

பொருட்கள், ஆராய்ச்சி சார்ந்த தொழில்முனைவின் மூலம் மதிப்புக்கூட்டப்பட்ட, புதுமையான மற்றும் சந்தை சார்ந்த உணவுத் தீர்வுகளை உருவாக்கு வதற்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டின.

இத்தகைய முன்னெடுப்புகளின் மூலம், ஆராய்ச்சியிலிருந்து தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திலிருந்து ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்களிலிருந்து தொழில் துறை எனும் இணைப்பை COXBIT தொடர்ந்து வலுப்படுத்தி, தமிழ்நாட்டின் உணவுப்பதப்படுத்துதல் மற்றும் புதுமைச் சூழலமைப்பின் வளர்ச்சிக்கு பங்களித்து வருகிறது.



# பாலில் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்ப மேம்பாட்டு பயிற்சி

புதுக்கோட்டை, ஆக.10

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பாலில் மதிப்புக்கூட்டுதல் தொழில் நுட்பங்கள் பற்றிய தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது.



இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்று கையில் பாலில் மதிப்புகூட்டுவதன் மூலம் ஏற்படும் தொழில் வாய்ப்புகளைப் பற்றி விவரித்தார்.

முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, நிலைய தொழில் நுட்பவல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச்சத்தியல்) பாலில் மதிப்புக்கூட்டுதல் தொழில் நுட்பங்கள் பற்றி விவரித்தார். முனைவர் எ. புன்னகையரசி, உதவி பேராசிரியர் (கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில் நுட்பம்) பால் பன்னீர், பால் கோவா, நறுமண மூட்டிய பால், குலாப் ஜாமூன் மற்றும் ரசகுல்லா தயாரித்தல் பற்றிய செயல் விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியில் விவசாயிகள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை தொழில்நுட்ப உதலியாளர்கள் கருப்பசாமி, அமுல்ராஜ் மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# சிறு அளவிலான தேன் உற்பத்தி குறித்த செயல்விளக்கப் பயிற்சி




தென்காசி, ஆக.10

தென்காசி மாவட்டம், விஸ்வநாதப்பேரி கிராமத்தில், கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமியின் தோட்டக் கலை மாணவர்கள், தங்களது ஊரகத் தோட்டக்கலைப் பணியனுபவ (Rural Horticultural Work Experience - RHWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, கடந்த 7ஆம் தேதியன்று "சிறு அளவிலான தேன் உற்பத்தி - நிலையான தோட்டக்கலை மதிப்புக்கூட்டல் செயலாக்கத் தொழில் முயற்சி" என்ற தலைப்பில் செயல்விளக்கப் பயிற்சியை நடத்தினர்.

இப்பயிற்சியில், அறிவியல் முறையிலான தேனீ வளர்ப்பு, தேன் சேகரிப்பு, சுகாதாரமான தேன் செயலாக்கம், தரக் கட்டுப்பாடு, மதிப்புக்கூட்டல், பொதியிடல் மற்றும் தேன் உள்ளிட்ட பிற தேனீப் பொருட்களின் சந்தைப்படுத்தல் தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், அறிவியல் முறையில் தேனீ வளர்ப்பை மேற்கொள்வதன் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், தொழில்முனைவோரை உருவாக்குதல் மற்றும் கூடுதல் வருமானம் ஈட்டுதல் ஆகியவற்றுக்கு தேன் உற்பத்தி ஒரு நிலையான தொழில் முயற்சியாக அமைய முடியும் என மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

மேலும், நவீன செயலாக்கத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகளை உறுதி செய்தல், மதிப்புக்கூட்டல் மூலம் தேனீப் பொருட்களின் வணிக மதிப்பை உயர்த்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது. இச்செயல்விளக்கப் பயிற்சியில் உள்ளூர் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, நிலையான தேன் உற்பத்தி மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு தொடர்பான பயனுள்ள தொழில்நுட்ப அறிவைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சி தோட்டக்கலை மாணவர்களான எம்.அபர்ணா உண்ணித்தன், ரஸக்னா கே., கார்த்திகா ஸ்ரீ எம். மற்றும் ஜி.அனிதா ஆகியோரால், சிறப்பாக நடத்தப்பட்டது.


# பட்டா எண்களை இணைக்க வேளாண்துறை அறிவுரை

திருவள்ளூர், ஆக.10

விவசாயிகள் தங்கள் பெயரில் உள்ள நிலங்களின் அனைத்து பட்டா எண்களையும் விவசாய அடையாள எண்ணில் சேர்க்க எல்லாபுரம் வேளாண்மைதுறை அழைப்பு விடுத்துள்ளது. விவசாயி ஒருவருக்கு பல பட்டாக்கள் இருந்தாலும் அவர் ஒரு பட்டாவில் உள்ள நிலத்தை மட்டுமே பதிவு செய்து விவசாய அடையாள எண் பெறுகிறார். மீதமுள்ள நிலங்களில் உள்ள விவரங்களை வேளாண் துறை அலுவலர்கள் உதவியுடன் பதிவு செய்ய வேண்டும் என வேளாண் துறையினர் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர்.

சில விவசாயிகள் தங்களது நிலங்களில் ஒரு பட்டாவை மட்டும் பதிவு செய்து அடையாள எண் பெற்றுள்ளனர். அதாவது பல பட்டாக்கள் இருந்தாலும் அவர் ஒரு பட்டாவில் உள்ள நிலத்தை மட்டுமே பதிவு செய்து பதிவு எண் பெறுகின்றனர். தங்களது மீதமுள்ள இடங்களில் உள்ள விவரங்களையும் பதிவு செய்து பட்டா எண் பெற வேண்டும்.

எனவே விவசாயிகள் தங்களுடைய அனைத்து பட்டாக்கள் ஆதார் எண் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மொபைல் ஆகியவற்றுடன் வேளாண்மை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு அனைத்து பட்டாக்களையும் விவசாயி அடையாள எண்ணில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் மத்திய மாநில அரசு வேளாண் திட்டங்கள் வாயிலாக மானியம் பெறவும் பயிர் கடன்கள் உர வினியோகம் உள்ளிட்ட அரசு நலத்திட்டங்கள் பலன்களை பெறவும் முடியும். இத்தகவலை அ உமாமகேஸ்வரி, வேளாண்மை உதவி இயக்குனர், எல்லாபுரம் தெரிவித்துள்ளார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# எல்–நினோ கால கட்டங்களில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள்

இந்தியாவில் எல்–நினோ ஆண்டில் தென்மேற்கு பருவமழை குறைதல், அதிக வெப்ப நிலை, நீண்ட நீடித்த வறட்சி, நீர்ப்பாசன பற்றாக்குறை போன்ற பாதிப்புகள் ஏற்படுவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் 12 மாவட்டங்களில் தீவிர பாதிப்பு ஏற்படுவதாக ஞானிம் தெரிவிக்கிறது. இதனால் பயிர் மகசூல் இழப்பு, பூச்சி நோய் தாக்குதல், தீவன தட்டுபாடு போன்ற சவால்களை விவசாயிகள் எதிர் கொள்ள வேண்டிய சூழல் உள்ளது. இதனை விவசாயிகள் கால நிலை மாற்றத்திற்கேற்ப நவீன தொழில் நுட்பங்களை பின்பற்றி மகசூல் இழப்பை கணிசமாக குறைக்க வாய்ப்புள்ளது. அவை என்னென்ன என்பதை விரிவாக பார்ப்போம்.

**1) காலநிலை ஏற்ற பயிர்த்திட்டங்கள்**

இந்திய வானிலை மையம் மற்றும் வேளாண்மை பல்கலைக் கழகங்கள் காலநிலை முன்னெறிவிப்புகளை தொடர்ந்து கவனித்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். குறைந்த தண்ணீரில் வளரும் பயிர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். குறிப்பாக வறட்சி தாங்கி மானாவாரியாக வளரக் கூடிய கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, தினை போன்ற பயிர் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். நீண்ட கால பயிர் இரகங்களை பயன்படுத்தாமல் குறுகிய கால பயிர் இரகங் களை (SHORT DURATION VARITY) சாகுபடிக்கு பயன் படுத்திடலாம். ஓரே பயிரை மட்டும் பயிரிடாமல் பல பயிர்கள் (MULTY CROP) பயன்படுத்திடலாம். ஒன்றில் நஷ்டம் ஏற்பட்டால் மற்ற பயிர்கள் கை கொடுக்கும்.

**2) வறட்சியை தாங்கும் ரகங்கள் என்னென்ன?**

நெல் – அண்ணா 4, PMK 1, TKM 13, CO 52, ADT 59, கம்பு – கோ 10, COH 10, சோளம் – கோ 34, வரகு – TNAU 86, ATL 1, கேழ்வரகு – ATL 1, நிலக்கடலை – VRI 10, உளுந்து – வம்பன் 8, 9 10, 11, பருத்தி – VPT 2, VPT 3, CO 17, பாசிபயறு – வம்பன் 5, எள் – VRI 4 & 5.

வறட்சியைத் தாங்குவதற்கும் நல்ல முளைப்புத்திறன் பெறுவதற்கும் விதைகளை TNAU விதை அமிர்தம் கொண்டு விதை நேர்த்தி செய்ய லாம். மேலும் பேசில்லஸ் சப்டிலிஸ் 10 கிராம்/ டி.விரிடி 4 கிராம் ஒரு கிலோ விதைக்கு என்றளவில் பூஞ்சான விதை நேர்த்தி செய்தும் விதைக்கலாம், விதைகளை கடினப்படுத்தியும் (SEED HARDENING) விதைக்கலாம். உயிர் உர விதை நேர்த்தியும் செய்யலாம்.

நீர் மேலாண்மை, மானாவாரி நிலங்களில் ஆழச்சால் அகல பாத்தி முறைகளில் மண்ணில் நீர்பிடிப்பு தன்மை உருவாக்க லாம். நெல்பயிரில் அதிகமாக நீர் பாய்ச்சாமல் காய்ச்சியலும் பாய்ச்சாலுமாக (ALTERNATIVELY WETTING AND DRYING) பின்பற்ற வேண்டும். நிலங்களில் பண்ணை குட்டை அமைத்து அதனையும் (CRITICAL CROP STAGE) நீர்ப்பாசனமாக பயன்படுத்தலாம். மேலும் SOIL MOISTURE INDICATER பயன்படுத்தலாம்.

### மூடாக்கு (MULCHING)

தாவர பயிர்களில் நிலத்தின் மண் வெயில் காலங்களில் ஆவியாவதை தடுக்க மூடாக்கு (MULCHING) வைக்கோல், கம்பு, சோள தட்டை களைச்செடிகளை நிலத்தின் மீது பரப்பலாம்.

### ஊட்டசத்து மேலாண்மை

மண்பரிசோதனை அடிப்படையில் உரங்களை பயன்படுத்திட வேண்டும். கூட்டு உரங்களை இடுவதைவிட (டி.ஏ.பி, காம்ப்ளக்ஸ்) நேரிடையான உரங்களை ( யூரியா, பொட்டாஷ் சூப்பர் பாஸ்பேட்) இடுவது நல்லது.

இவைகள் பயிர்கள் துரிதமாக எடுத்துக் கொள்ளும். நிலமும் களர், உவர் பிரச் சனைகள் பாதிக்காது. நீரில் கரையும் உரங் களை பயன்படுத்திடலாம். இலைவழியாக தெளிப்பாகவும் பயன்படுத்தலாம். வறட்சியான காலங்களில் 1% பொட்டாசியம் குளோரைடு (KCL) யூரியா 1% கரைசல் தெளிக்கலாம். மேலும் TNAU BOOSTER, ( PULSES WONDER, GROUND NUT RICH) போன்றவற்றை பயன்படுத்தலாம்.

**பூச்சி/ நோய் மேலாண்மை**

வறட்சியும் வெப்பமான காலகட்டத்தில் மாவு பூச்சி. தண்டு துளைப்பான் போன்றவை அதிகமாக தாக்கும். விளக்குப் பொறி, இனக்கவர்ச்சி பொறி, ஒட்டு பொறி வைத்து பாது காக்கலாம்.

**பயிர் காப்பீடு (CROP INSURANCE)**

இந்த எல்–நினோ காலங்களில் மகசூல் இழுப்பு ஏற்படாத வகையில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு 100% பயிர் காப்பீடு செய்ய வேண்டும்.

**சந்தைபடுத்துதல் (MARKETING)**

அறுவடை செய்யப்பட்ட விளைப்பொருட்களை அப்படியே களத்து மேட்டுலே விற்பனை செய்யாமல் கட்டுபடியான விலையில் விற்பனை செய்ய இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும். இதற்காக அருகேயுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் உதவுகின்றன.

எனவே இந்த இக்கட்டான காலகட்டத்தில் வேளாண்மையில் மேலே கண்ட தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் எல்–நினோ சவாலை வெற்றிகரமாக எதிர் கொள்ளலாமே.

**என்ன சரியா ??**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தலைக் கவசம் உயிர்க் கவசம்
# முறையாக தலைக் கவசம் அணிவோம்



# நவீன வேளாண்மையில் தேனீ குடும்பங்கள் உற்பத்தி செய்யும் முறை

● **இயற்கை முறை :** அதிக தேனீ எண்ணிக்கை கொண்ட பெட்டிகளை தேர்வு செய்ய வேண்டும் ராணித் தேனீ சீரான முட்டையிடும் தன்மை உடையதாக இருக்க வேண்டும். அதிக மகசூல் அளித்த பெட்டியினை தேர்ந்தெடுக்க வேண்டும் நோயற்ற நேர்த்தியான தேனீ குடும்பமாக இருக்க வேண்டும்.



● தேர்ந்தெடுக்க பெட்டியில் நவம்பர் மாதத்தில் 'சூப்பர்' அறைகளை அகற்றி விட்டு புழு அறையினை மூடி விடவும் அதிக தேனீக்கள் இருப்பதால் இடப்பற்றாக்குறை காரணமாக ராணித் தேனீ அறைகள் (சுமார் 2-7 வரை) தானாகவோ மூன்று நான்கு நாளில் உருவாகத் தொடங்கி விடும். சிறியளவில் உள்ள ராணித் தேனீயின் அறைகள் காம்பு வடிவில் இருக்கும். அறைகள் தோன்றி 10-12 நாட்களுக்குள் ராணித் தேனீ வெளி வந்து அவை வெளியே வருமுன்னதாக பெட்டிகளைப் பிரிப்பது அவசியம் காம்புகளின் அடிப்பகுதி கருமையாக மாறுவது ராணித் தேனீ (சில மணி நேரத்தில்) வெளிவருவதை உணர்த்தும் அறிகுறியாகும்.

● வெளிவர தயாராக இருக்கும் ராணித் தேனீ அறைகளை சேதம் அடையாமல் அறைகளுக்கு மேல் ஒரு செ.மீ இடை வெளியிட்டு சதுர வடிவில் வெட்டி எடுத்த பின்னர் வெற்று தீப்பெட்டியினுள் பஞ்சு வைத்து அதனுள் ராணிக் கூட்டினை பத்திரமாக வைக்கவும். எறும்புகள் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

● 'புழு அறை' மட்டும் கொண்ட புதிய தேன் பெட்டி ஒன்றை சுத்தமாக துடைத்து சிறிது புகையிட்டு வைத்துக் கொள்ளவும். இப்பெட்டியில் முட்டை, புழு தேன் மற்றும் மகரந்தம் முதலியன மட்டுமின்றி குறிப்பாக தேனீக்களும் இருக்குமாறு மூன்று சட்டங்கள் தேர்வு செய்து தாய்ப் பெட்டியிலிருந்து எடுத்து வைக்கவும். மூடியினை நன்கு பொருந்திய பின்னர் சுமார் ஒரு கி.மீட்டர் தூரத்தில் தள்ளி வைக்க வேண்டும். மீண்டும் பழைய இடத்திற்கே வந்து, தீப்பெட்டியில் வைக்கப்பட்டுள்ள ராணித் தேனீ கூட்டினை பத்திரமாக புதிய பெட்டியினுள், இரண்டு புழு அறை சட்டங்களுக்கு இடையில் பொருத்தி விடவும், புதிய ராணித் தேனீயை கொடுப்பதற்கும் பெட்டிகளை தாய்ப் பெட்டியிலிருந்து பிரித்ததற்கும் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது இருப்பின் வெளிவரும் புதிய ராணித் தேனீயை இதர தேனீக்கள் எளிதில் ஏற்றுக் கொள்ளும்.

**இயற்கை முறை :** மேலே கூறியவாறு புதிய பெட்டிகளை 1 கி.மீட்டர் தூரம் பிரித்து வைத்து, ராணித் தேனீ கூட்டினை கொடுக்காமலே உற்பத்தி செய்யலாம். இம்முறையில் ஒரு நாள் வயதுடைய புழுக்கள் (24-48) நேரம் புதிய பெட்டியின் புழு அறைகளில் இருப்பது முக்கியம். தேனீக்கள் இம்முறையில் ஒரு நாள் வயதுடைய புழுக்கள் ராணித் தேனீயாக மாற்றப்படும். ஆனால் இம்முறையில் வெற்றி வாய்ப்பு குறைவு.

# செயற்கை முறையில் ராணித் தேனீ அறை அச்சு தயாரிப்பு

இம்முறையில் முதலில் செயற்கையாக ராணித்தேனீ அறை தயாரிக்கப்பட வேண்டும். ' தேன் மெழுகினை' இளக்கிய பின்னர் ராணித்தேனீ அறையை ஒத்த வடிவிலான குச்சியினை மூன்று முறை முக்கி எடுக்க வேண்டும். ஒவ்வொரு முறை முக்கி எடுக்கும் போது 0.2 செ.மீ தடிமன் உள்ளவாறு பார்த்துக் கொள்ளவும். குச்சிகளை முதன் முதலாக மெழுகினில் முக்குவதற்கு முன்னதாக தண்ணீரில் நனைத்துக் கொள்ளவும்

ராணித் தேனீ அச்சு தயாரிப்பில் நிபுணத்துவம் (நுணுக்கம்) பெறுவது அவசியம். இரண்டாவதாக மெழுகினை உருக்கி ஊற்றி 1-1.5 செ.மீ அளவிலான துண்டுகளாக தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். மூன்றாவதாக காலியாக உள்ள சட்டங்களில் தலை கீழாகப் பிடித்துக் கொண்டு ஒரு சொட்டு மெழுகு இட்டு, தயாரித்து வைத்த சதுர வடிவ மெழுக அச்சுகளை ஒட்ட வேண்டும். பின் அந்த அச்சின் மேற்பரப்பில் மெழுகினை பயன்படுத்தி ராணித் தேனீ குமிழ்களை (அறை) பொருத்த வேண்டும். ஒவ்வொரு ராணித் தேனீ குப்பிகளுக் கிடையே குறைந்த பட்சம் 1 செ.மீ இடைவெளியில் பல குப்பிகளைப் பொருத்தி ராணித் தேனி உற்பத்தியினை மேற்கொள்ளலாம்.

தேர்வு செய்யப்பட்ட தாய் பெட்டியிலிருந்து ராணித் தேனீயை அப்புறப்படுத்திய பின்னர் ஒரு நாள் வயதுடைய புழுக்களை மெல்லிய தூரிகை அல்லது இதற்கென உள்ள ஊசியின் மூலமாகவோ செயற்கை முறையில் தயாராக உள்ள ராணித் தேனீ குமிழுக்குள் அரச கூழ் ஒரு துளி செலுத்திய பின்னர் இட வேண்டும். ஒரு மணி நேரத்திற்குப் பின்னதாக செயற்கை முறை ராணித் தேனீ குமிழ்களை இரண்டு புழு அறைகளுக்கு இடையில் வைக்க வேண்டும்.

ஒரு வாரத்திற்கு பின்னர் 'ராணித் தேனீ புழு' மூடப்பட்டு இருப் பதைக் காணலாம். 10 (அ) 11 வது நாளில் ராணித் தேனீ வெளி வருவதற்கான அறிகுறிகள் தென்படும். ஒவ்வொரு ராணித் தேனீ கூண்டினஷ்யும் காம்பின் அடிப்பாகம் கருத்தவுடன் அடித்தள மெழுகோடு சட்டத்திலிருந்து பிரித்து இயற்கை முறையில் குறிப்பிடடுள்ளபடி ஒரு கி.மீ தள்ள புதிய பெட்டிகளை வைத்து தேனீ குடும்பங்களை வெற்றிகரமாக பெருக்கலாம்.

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*

# காய்கறிகளை சேமிக்க ஜிரோ எனர்ஜி குளிர் பதன கிடங்கு செயல்விளக்கமளித்த வேளாண் பல்கலை மாணவர்கள்



ஈரோடு, ஆக.10

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக கிராம தங்கல் மாணவிகள் ஆனந்தி லேகா ஸ்ரீ, கவி வர்ஷினி, திருஷாத்தா, நதியா, நீஷா பார்ஜோ ஆகியோர் ஈரோடு மாவட்ட விவசாயி ளுக்கு காய்கறிகளை அறுவடை செய்த பின் குறுகிய காலத்திலேயே தரம் மற்றும் எடையை இழந்து பாதிக்கப் படுவதைத் தவிர்க்கும் வகையில், மாணவர்கள் சார்பில் ஜிரோ எனர்ஜி குளிபதன கிடங்கு அமைக்கும் முறையும் அதன் பயன்பாடுகளும் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர்.

மின்சாரம் இன்றி, மணல், செங்கல் மற்றும் நீரைப் பயன்படுத்தி எளிய முறையில் அமைக்கப்படும் இக்குளிர்சாதன அறையின் கட்டுமான முறையை மாணவர்கள் விளக்கினர்.

காய்கறிகளை குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதத்தில் வைத்திருப்பதன் மூலம் அவற்றின் புத்துணர்ச்சி, தரம் மற்றும் சேமிப்பு காலத்தை அதிகரிக்க முடியும் என எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக தக்காளி, கீரைகள், காய்கறிகள் போன்ற அழுகக் கூடிய விளைபொருட்களை உடனடியாக விற்பனை செய்ய முடியாத சூழலில் இத்தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என விளக்கப்பட்டது.

குறைந்த செலவில், மின்சாரச் செலவின்றி அமைக்கக்கூடிய இந்த எளிய சேமிப்பு முறையை விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்தினர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பி.டெக். உயிரித் தகவலியல் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி



கோயம்புத்தூர், ஆக.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பி.டெக். உயிரித் தகவலியல் பயிலும் மாணவர்களின் தொழில் நுட்பத் திறன்களை மேம் படுத்தி, உயிரித் தகவலியல் சார்ந்த தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெறு வதற்கான திறன்களை வளர்க்கும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறை சார்பில் நடைபெற்ற இப்பயிற்சித் தொடரில், நவீன உயிரித் தகவலியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

முதல் பயிற்சிப் பட்டறை – மருத்துவ மரபணுத் தகவலியலில் உயிரித் தகவலியலின் பயன்பாடுகள் – என்ற தலைப்பில் 18.07.26 அன்று நடைபெற்றது. கோயம்புத்தூரைச் சேர்ந்த இன்சிலிகாமிக்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலரும் நிறுவனருமான முனைவர் விவேக் சந்திரமோகன் சிறப்பு பயிற்சி-யாளராகக் கலந்து கொண்டு, மருத்துவ மரபணுத் தகவலியல் மற்றும் அதன் தொழில்துறை பயன்பாடுகள் குறித்து மாணவர் களுக்கு பயிற்சி அளித்தார்.

இரண்டாவது பயிற்சிப் பட்டறை "தாவர அழுத்த உயிரியல் ஆய்வில் ஒருங்கிணைந்த செயற்கை நுண்ணறிவு மற்றும் பல – ஓமிக்ஸ் அணுகுமுறைகள்" என்ற தலைப்பில் 01.08.26 அன்று நடைபெற்றது. எஸ்.எஸ்.டெக்லாஜிக்ஸ் நிறுவனத்தின் நிறுவன ரான முனைவர் ஜெ.சரண்யா சிறப்பு பயிற்சியாளராகக் கலந்து கொண்டு, செயற்கை நுண்ணறிவு மற்றும் பல – ஓமிக்ஸ் தொழில் நுட்பங்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சிகளின் மூலம் மாணவர்கள் மருத்துவ மரபணுத் தகவலியல், செயற்கை நுண்ணறிவு, பல – ஓமிக்ஸ் தரவுப் பகுப் பாய்வு உள்ளிட்ட வளர்ந்து வரும் துறைகளில் தொழில்நுட்ப அறிவையும் நடைமுறைப் பயிற்சியையும் பெற்றனர். இதன் மூலம்

தொழில்துறையின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப தங்களது திறன்களை மேம்படுத்திக் கொண்டு, எதிர்கால வேலைவாய்ப்புகளுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். இருபயிற்சிப் பட்டறைகளிலும் 3ம் ஆண்டு பி.டெக். உயிரித்தகவலியல் மாணவர்கள் 21 பேர் பங்கேற்று பயனடைந்தனர்.

இந்நிகழ்வுகளை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர் N.செந்தில், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறைப் பேராசிரியரும் தலைவருமான முனைவர் L.அருள் மற்றும் உயிர் வேதியியல் இணைப்பேராசிரியர் முனைவர் D.அமிர்தம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# பருத்தி உற்பத்தி திறனுக்கான இயக்கம் (Mission for Cotton Productivity)

விருதுநகர், ஆக.10

பருத்தியின் விளைச்சலை அதிகரிக்கவும், தரத்தை உயர்த்தவும் மற்றும் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் இந்திய அரசாங்கத்தால் 2026-27ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட ஒரு சிறப்பு திட்டமாகும். இத்திட்டமானது பருத்தி உற்பத்தி அதிகரித்தல் மற்றும் உற்பத்தி திறன் ஒரு எக்டருக்கு 425 கிகி பஞ்சு என்பதனை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அடர் நடவுமுறைக்கான தொகுப்பு செயல் விளக்கத்திடல் அமைத்தல், நெருக்கமான இடைவெளி நடவுமுறைக்கான தொகுப்பு செயல்விளக்கத்திடல் அமைத்தல், கூடுதல் நீண்ட இழை பருத்தி உற்பத்தி தொழில்நுட்பத்திற்கான செயல் விளக்கத்திடல் அமைத்தல், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொகுப்பு செயல்விளக்கத்திடல் அமைத்தல், ஆளில்லா விமானம் மூலம் பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பிற்கான 50 சதவீத வாடகை மானியம் போன்ற நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் மூலம் பருத்தி விவசாயத்தில் சாகுபடி செலவினை குறைத்து வருமானத்தை அதிகப்படுத்தலாம். இத்திட்டத்தில் குறைந்த பரப்பளவில் அதிக செடிகளை பயிரிடும் முறைகளான உயர் அடர்வு நடவு முறையில் எக்டருக்கு ரூ.18500/- மானியமும், நெருக்கமான இடைவெளி நடவு முறைக்கான தொகுப்பு செயல்விளக்கத்திடல் அமைத்தலுக்கு எக்டருக்கு ரூ.14000/- மானியமும், கூடுதல் நீண்ட இழை பருத்தி உற்பத்தி தொழில்நுட்பத்திற்கான செயல் விளக்கத்திடல் அமைத்தலுக்கு எக்டருக்கு ரூ.9500/- மானியமும், பருத்தியின் வளர்ச்சியை மேம்படுத்தவும், அதிக மகசூல் பெறவும், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொகுப்பு செயல் விளக்கத்திடல்

அமைத்தலுக்கு ரூ.7500/- மானியமும், ஆளில்லா விமானம் மூலம் பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பிற்கான 50 சதவீத வாடகை மானியமாக எக்டருக்கு ரூ.1500/-ம், விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. எனவே சிவகாசி வட்டார பருத்தி சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் உழவன் செயலி மூலம் பதிவு செய்தும், தங்கள் பகுதி உதவி விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொண்டு அல்லது ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தினை அணுகியோ பயன் பெறலாம். அனைத்து பருத்தி சாகுபடி விவசாயி களும் இத்திட்டத்தில் பயன்பெற்று பருத்தி உற்பத்தி திறனை அதிகப் படுத்தி வருமானத்தினை பெருக்கிட சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.இராமசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.



# கொய்யாவில் பதியன் முறையின் மூலம் தரமான நாற்றுகள் உருவாக்குதல் – செயல்விளக்க நிகழ்ச்சி



மதுரை, ஆக.10

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் தாரணி லோகநாதன், தர்ஷினி, கிருஷ்ண பிரியா, கல்கி, அமிர்த கார்த்திகா மற்றும் லாவண்யா ஆகியோர், RAWE (Rural Agricultural Work Experience) - கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதி யாக, மதுரை மாவட்டம், அழகாபுரி கிராமத்தில் கொய்யாவில் பதியன் (Air Layering) முறையில் தரமான நாற்றுகள் உருவாக்குவது குறித்த செயல்விளக்க நிகழ்ச்சியை விவசாயி களுக்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் நோக்கம், கொய்யா மரத்தில் பதியன் முறையைப் பயன்படுத்தி தாய்மரத்தின் சிறந்த பண்புகளைத் தக்கவைத்துக் கொண்ட தரமான நாற்றுகளை உருவாக்கும் முறையை விவசாயிகளுக்கு எளிய முறையில் விளக்குவதாகும். மாணவிகள் பதியன் அமைக்கும் ஒவ்வொரு நிலையையும் நேரடி செயல்விளக்கத்தின் மூலம் எடுத்துக் காட்டியதுடன், விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் தெளிவான விளக்கங் களை வழங்கினர்.

**கொய்யாவில் பதியன் அமைக்கும் செய்முறை**

**1. கிளைத் தேர்வு**

ஆரோக்கியமாக வளர்ந்த, நோய் மற்றும் பூச்சித் தாக்குதல் இல்லாத, பென்சில் அளவு தடிமனுள்ள இளம் கிளையைத் தேர்வு செய்ய வேண்டும்.

**2. பட்டை நீக்கம்**

தேர்வு செய்யப்பட்ட கிளையில் சுமார் 2—3 செ.மீ. அகலத்தில் பட்டையை வளைய வடிவில் முழுமையாக நீக்க வேண்டும்.

**3. வேர்வளர்ச்சி ஊக்கி பயன்படுத்துதல்**

பட்டை நீக்கப்பட்ட பகுதியைச் சுத்தமாக வைத்த பின்னர், தேவைக் கேற்ப IBA (Indole-3-Butyric Acid) போன்ற வேர்வளர்ச்சி ஊக்கி யைப் பயன்படுத்தலாம்.

**4. பதியன் ஊடகம் அமைத்தல்**

ஈரப்பதம் கொண்ட கோகோபீட் (Cocopeat), ஸ்பாகனம் பாசி (Sphagnum moss) அல்லது ஏற்ற ஈரமான நாற்று ஊடகத்தைப் பட்டை நீக்கப்பட்ட பகுதியைச் சுற்றி நன்கு பொருத்த வேண்டும்.

**5. பாலித்தீன் தாள் மூலம் மூடுதல்**

ஈரமான ஊடகத்தின் மீது வெளிப்படையான பாலித்தீன் தாளைச் சுற்றி, அதன் இரு முனைகளையும் கயிறு அல்லது பிளாஸ்டிக் டேப் மூலம் இறுக்கமாகக் கட்ட வேண்டும். பதியன் பகுதியில் தேவை யான ஈரப்பதம் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.

**6. வேர்கள் உருவாகுதல் மற்றும் பிரித்தெடுத்தல்**

பொதுவாக சில வாரங்களில் பதியன் பகுதியில் வேர்கள் உருவாகத் தொடங்கும். போதுமான அளவு வேர்கள் நன்கு உருவானதும், பதியன் செய்யப்பட்ட கிளையை தாய்மரத்திலிருந்து கவனமாக வெட்டி எடுத்து, பாலித்தீன் பைகள் அல்லது பொருத்த மான தொட்டிகளில் நடவு செய்து பராமரிக்க வேண்டும். பின்னர் நன்கு வளர்ந்த நாற்றுகளை வயலில் மாற்றி நடவு செய்யலாம்.

**பதியன் முறையின் முக்கிய நன்மைகள்**

தாய்மரத்தின் விரும்பத்தக்க பண்புகளைத் தக்கவைத்துக் கொண்ட நாற்றுகளை உருவாக்க முடியும். விதை மூலம் பெருக்கும் முறையைவிட விரைவாக கன்றுகளைப் பெற முடியும். தாவரங்கள் ஒப்பீட்டளவில் விரைவாக பூத்து காய்க்கத் தொடங்கும். ஒரே மாதிரியான வளர்ச்சி மற்றும் தரமான மகசூலைப் பெறுவதற்கு உதவுகிறது. நல்ல வேரமைப்புடன் கூடிய தரமான நடவுப் பொருளை உருவாக்க முடியும். வணிக ரீதியாகத் தரமான கொய்யா நாற்று உற்பத்திக்கு ஏற்ற ஒரு தாவரப் பெருக்க முறையாகும். விரும்பத்தக்க தாய்மரங்களிலிருந்து அதிக எண்ணிக்கையில் ஒரே மாதிரியான நாற்றுகளை உருவாக்க உதவுகிறது. இத்தகைய செயல்விளக்க நிகழ்ச்சிகள் மூலம், நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் எளிமையாகக் கொண்டு சேர்ப்பதுடன், மாணவர்களின் களப்பணி மற்றும் தொழில்நுட்பத் திறன்களும் மேம்படுகின்றன. மேலும், அறிவியல் அடிப்படையி லான தாவரப் பெருக்க முறைகளை விவசாயிகள் தங்களது பண்ணைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சிகள் ஊக்கமளிக்கின்றன.

# தென்னையில் கருந்தலைப்புழு (ஒபிசீனியா அரினோசெல்லா) மேலாண்மை



கருந்தலைப்புழு (ஓபிசினா அரெனோசெல்லா) எனப்படும் இலை உண்ணும் கருந்தலைக் கம்பளிப்புழு, இந்தியாவின் அனைத்து தென்னை விளையும் பகுதிகளிலும் கணிசமான மகசூல் இழப்பை ஏற்படுத்தும் ஒரு தீவிரமான தென்னை பூச்சியாகும். இது அனைத்து வயது தென்னை களையும் தாக்குவதுடன், தென்னை இலைகளை அதிக அளவில் உண்ணும் தன்மை உடையது. முதிர்ந்த தென்னை மரங்களில், இலைகளின் வெளி அடுக்குகளில் பூச்சித் தாக்குதல் தொடங்குகிறது. பூச்சி உண்பதால் ஏற்படும் சேதத்தின் காரணமாக, குறிப்பாக கீழ் ஓலைகளின் ஒளிச் சேர்க்கைத் திறன் பாதிக்கப்படும். கடுமையான சந்தர்ப்பங்களில், இலைகள் காய்ந்து விடுவதால் முழுத்தோட்டமும் கருகியது போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும். கடுமையான தாக்குதல்களின் போது, பாதிக்கப் பட்ட இலைகள் வாடி, குலைகள் வளைந்து, உதிர்ந்து விடும்.



அனைத்து வயது தென்னை மரங்களும் தாக்கப்படுகின்றன. இந்தப் பூச்சி ஆண்டு முழுவதும் காணப்படுகிறது. நவம்பர் முதல் மே மாதம் வரையிலும், மழைக்குப் பிறகு ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையிலும் இந்தப் பூச்சியின் தாக்குதல் காணப்படுகிறது. கோடை காலத்தில் (மார்ச்–மே) இதன் எண்ணிக்கை உச்சத்தை அடைகிறது.



**சேதத்தின் அறிகுறிகள்**

- அனைத்து வயது தென்னை மரங்களும் தாக்கப்படுகின்றன.
- கீழ் இலைகளில் காய்ந்த திட்டுகள் காணப்படும். மரத்தின் மையத்தில் உள்ள மூன்று அல்லது நான்கு இளமையான இலைகள் மட்டுமே பச்சையாக இருக்கும்.
- சிற்றிலைகளின் அடிப்பகுதியில் பட்டு இழைகள் மற்றும் கழிவுகள் காணப்படும்.
- கடுமையான பாதிப்பு ஏற்பட்டால், முழுத்தோட்டமும் கருகியது போல் காணப்படும்.

## பூச்சியை அடையாளம் காணுதல்



● **புழு :** கம்பளிப்புழு பச்சை கலந்த பழுப்பு நிறத்திலும், அடர் பழுப்பு நிறத்தலை மற்றும் முன்மார்புப் பகுதியையும், சிவப்பு நிற நடுமார்புப் பகுதியையும் கொண்டிருக்கும். அதன் உடலில் பழுப்பு நிறக்கோடுகள் காணப்படும்.

● **கூட்டுப் புழு:** இது வலைக்குள்ளேயே ஒரு மெல்லிய பட்டுக்கூட்டிற்குள் கூட்டுப்புழுவாக மாறும்.



● **முதிர்ந்த அந்துப் பூச்சி :** சாம்பல் கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும்.

● **பெண் அந்துப்பூச்சி :** நீண்ட உணர்கொம்புகளையும், முன் இறக்கைகளில் 3 மங்கலான புள்ளிகளையும் கொண்டிருக்கும்.

● **ஆண் அந்துப்பூச்சி :** பின் இறக்கைகளின் நுனி மற்றும் குத ஓரங்களில் விளிம்பு போன்ற முடிகளைக் கொண்டிருக்கும்.

## மேலாண்மை



● தென்னை கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்த, கடுமையாகப் பாதிக்கப்பட்ட கீழ் இலைகளை உடனடியாக வெட்டி எரிக்கவும்.

● இரவில் சுறுசுறுப்பாக இருக்கும் முதிர்ந்த அந்துப்பூச்சிகளைக் குறி வைத்து, தென்னைக் கருந்தலை கம்பளிப் புழுக்களை கட்டுப்படுத்த ஒளிப் பொறிகளைப் பயன்படுத்துவது ஒரு பயனுள்ள, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையாகும். தரையிலிருந்து 3 அடி உயரத்தில் மேல் நோக்கிப் பொருத்தப்பட்ட ஹாலஜன் விளக்குடன் இணைக்கப்பட்ட ஒரு தட்டு - நீர் பொறியே மிகவும் பயனுள்ள அமைப்பாகும். ஏக்கருக்கும் ஒரு ஒளிப்பொறியை தினமும் மாலை 7:00 மணி முதல் இரவு 11:00 மணி வரை இயக்கவும், தட்டு-நீர் பொறி வடிவமைப்பு : தண்ணீர் மற்றும் சில துளிகள் மண்ணெண் ணெய், சமையல் எண்ணெய் அல்லது திரவ சோப்பு நிரப்பப்பட்ட ஒரு அகலமான பிளாஸ்டிக் தட்டை, ஒளி மூலத்திற்கு நேர் கீழே வைக்கவும். அந்துப்பூச்சிகள் ஒளியால் ஈர்க்கப்பட்டு, அதில் மோதி, திரவத்தில் விழுந்து மூழ்கி இறந்து விடுகின்றன.

● கோடைக் காலத்தில் பூச்சிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, ஜனவரி மாதம் முதல் குறிப்பிட்ட கால இடைவெளியில், ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகளை விடுவிக்கவும். புழு



ஒட்டுண்ணிகளில், பெத்திலிட்கோனியோ சஸ்நெபான்டிடிஸ் கருந்தலைப் புழு பூச்சியைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஒட்டுண்ணி விகிதத்தின் உகந்த வெளியீட்டு நிலை 1:8 ஆகும். பூச்சி 2வதுஅல்லது 3வதுபருவ (இன்ஸ்டார்) புழு நிலையில் இருக்கும் போது ஒட்டுண்ணியை @ 3000/எக்டருக்கு தென்னை மரங்களுக்கு அடியில் விடவேண்டும். ஒட்டுண்ணி வெளியீடு பொறியை வெளியிட பயன்படுத்தப்படலாம்.

உணவளிக்கும் இடத்தில் ஒட்டுண்ணிகிரீடப் பகுதியில் ஒட்டுண்ணிகள் வெளியிடப்படக்கூடாது, ஏனெனில் அவை சிலந்திகள் மற்றும் ரெடுவிட் பிழைகள் போன்ற வேட்டையாடு பவர்களால் கொல்லப்படும்.




● இரசாயன மற்றும் இயந்திரக் கட்டுப்பாடு : இளம் தென்னை மரங்களில் பூச்சியின் கடுமையான தாக்குதல் ஏற்படும் பட்சத்தில், இலைகளின் அடிப்பரப்பை முழுமையாக மூடும் வகையில் மாலத்தியான் 50 EC 0.05% (1 மிலி/லிட்டர்) மருந்தைத் தெளிக்கவும்.

● **தென்னை கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த வேர்ஊட்டம் அளித்தல் :** புதிய மற்றும் உயிருள்ள ஒரு வேரைத் தேர்ந்தெடுத்து, அதை ஒரு கோணத்தில் கூர்மையாக வெட்டி, 7 x 10 செ.மீ பாலித்தீன் பையில் 10 லி தண்ணீர் உள்ள பூச்சிக்கொல்லிக் கரைசலில் அந்த வேரைச் செருகவும். ஒரு பருத்தி நூலைக் கொண்டு பையை வேருடன் இறுக்கமாகக் கட்டவும். இருபத்தி நான்கு மணி நேரத்திற்குப் பிறகு, உறிஞ்சுதல் உள்ளதா எனச் சரிபார்க்கவும். உறிஞ்சுதல் இல்லை என்றால், மற்றொரு வேரைத் தேர்ந்தெடுக்கவும். பூச்சியின் கடுமையான தாக்குதல் ஏற்படும் சமயங்களிலும், மரத்தின் உயிர் வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போதும் மட்டுமே இது பரிந்துரைக் கப்படுகிறது.



தகவல் : ***முனைவர் வி.அ.விஜயசாந்தி (பூச்சியியல் துறை), முனைவர் செ.சுதாஷா, (தாவர நோயியல் துறை), முனைவர் சி.பானுமதி, முனைவர் ஆ.ஷீபா (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை), முனைவர் க.சிவகாமி (உழவியல் துறை), முனைவர் அ.புனிதா (தோட்டக்கலைத் துறை) மற்றும் முனைவர் இரா.அகிலா, (வேளாண் விரிவாக்கத் துறை), வேளாண்மை அறிவியல் நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம் – 602 025.***


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333